**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 31.01.2020

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரி, தை மாதம் 17ஆம் நாள் **31.01.2020 வெள்ளிக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி–அல்லிநகரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் JCB TN60A 7466 வாகனத்திற்கு புதிய டயர்கள் பொருத்திட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளியின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | Sivakesa Tyres, Theni | **88600/–** |
| 2. | Lakshmi Tyres, Theni | 89600/- |
| 3. | Udhayam Tyres, Theni | **89000/–** |

**அலுவலக குறிப்பு:–**

**1.** மேலும் விபரப்படி வரிசை எண்.**1** ல் குறிப்பிட்டுள்ள நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருதி புதிய டயர்கள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கயிதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1292 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி–அல்லிநகரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60A 7466 JCB வாகனத்திற்கு புதிய டயர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.**90,000/–** க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**4021/2019**/எச்**1**)

**தீர்மான எண். 1293 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 03:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனையம் மேற்கு மேற்கு பக்க காலியிடம் கடை : 1 (வரிவிதிப்பு எண் : 125/2007001) திரு.P.விஜயன் என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.P.விஜயன் மற்றும் திரு.I.V.சரவண பிரேம் இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.P.விஜயன் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக வெளியூர் செல்வதால் கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.I.V.சரவண பிரேம் என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி காமராஜர் பேருந்து முனையம் மேற்கு மேற்கு பக்க காலியிடம் கடை : 1 (வரிவிதிப்பு எண் : 125/2007001) திரு.P.விஜயன் என்பவர் பெயரிலிருந்து திரு.I.V.சரவண பிரேம் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.74/2020/அ3)

**தீர்மான எண். 1294 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 04:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான உப்பார்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில், உரம் தயாரிப்பதற்கான கூரையில்லா மேடை அமைக்கும் பணிக்கு ரூ. 45.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளும் போது பணியின் மொத்த மதிப்பு கூடுதலானதால் அளவு புத்தகத்தின் படி ரூ.49,45,500/-க்கு பணி மேற்கொண்ட காரணத்தினால், கூடுதலாக செய்யப்பட்ட தொகை ( ரூ. 49,45,000 - ரூ. 45,00,000 ) ரூ.4,45,500/- ஆகும். மேற்படி தொகையானது மதிப்பீட்டினை காட்டிலும் 9.9% கூடுதலாக

இருப்பதாலும், கூடுதலாக மேற்கொண்ட பணிக்கு உரிய தொகைக்கு நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களிடம் பணிமுடிவறிக்கை 25.10.2019-ம் தேதியில் பெறப்பட்டுள்ளதால் மதிப்பீட்டினை கூடுதலாக செய்துள்ள தொகை ரூ.4,45,500/-ஐ இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**6472/2015/இ1)**

**<u>தீர்மான எண். 1295 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் இயங்கி வரும் மின்தூக்கி ( Johnson Lift ) அங்கீகாரம் பெற்ற Johnson Lifts Pvt Ltd., மதுரை நிறுவனத்தின் மூலம் 31.01.2020 - ம் தேதி வரை பராமரிப்பில் உள்ளது. மேற்கண்ட ஆண்டு பராமரிப்பு 31.01.2020-ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்படி மின் தூக்கியினை பழுது இல்லாமல் உரிய முறையில் பராமரிப்பு செய்து இயக்கும் பொருட்டு 01.02.2020-ம் தேதி முதல் மேலும் ஒரு ஆண்டிற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணியினை அங்கீகாரம் பெற்ற Johnson Lifts Pvt Lt., மதுரை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1.11 ஒரு இலட்சத்து பதினொறாயிரத்துக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ( ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் இயங்கி வரும் மின் தூக்கியினை ஒராண்டு காலத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 1.11 |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1) அலுவலக மின் தூக்கியினை அங்கீகாரம் பெற்ற Johnson Lifts Pvt Ltd மதுரை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0081/2020/இ1)

**<u>தீர்மான எண். 1296 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைப் பணிக்காக 2 எண்ணம் டிசில்ட்டிங் வாகனங்கள் வாங்குவதற்கு முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த பட்ச

ஒப்பந்தப்புள்ளி கோரிய Rock & Arch Construction ( India ) Pvt Ltd, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் Rock & Arch Construction (India ) Pvt Ltd என்ற நிறுவனம் 2 வாகனங்களை ஆணையாளர் தேனி – அல்லிநகரம் நகரராட்சி என்ற பெயரில் பதிவு செய்து, காப்பீடு கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொண்டு இந்நகராட்சிக்கு விநியோகம் செய்துள்ளது.

மேற்படி விநியோகம் செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கு Rock & Arch Construction ( India ) Pvt Ltd என்ற நிறுவனம் செலவினம் மேற்கொண்ட கீழ்கண்ட விபரப்படியான பட்டியல் தொகையினை வழங்க கோரி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் Rock & Arch Construction ( India ) Pvt Ltd என்ற நிறுவனம் செலவினம் மேற்கொண்ட மொத்த தொகை ரூ. 136269/- ஐ இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| S.No | Description of Expenses | Vehicle No: TN 60 AF 0619 | Vehicle No : TN 60 AE 9759 | Total Amount (Rs.) |
|---|---|---|---|---|
| | | Amount (Rs.) | Amount (Rs.) | |
| 1 | Insurance ( Permanent ) | 20216 | 20216 | 40432 |
| 2 | R.T.O Registration | 27327 | 26542 | 53869 |
| 3 | Chassis Temporary Registration | 984 | 984 | 1968 |
| 4 | Other Charges : Number Plate, Stricker, Local Conveyance Charges and Local Transportation | 20000 | 20000 | 40000 |
| **Total** | | **68527** | **67742** | **136269** |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 0033 / 2020 / இ1)

**<u>தீர்மான எண். 1297 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் இதர காய்ச்சல்கள் பொது மக்களுக்கு மற்றும் குழந்தைகளுக்கு வராமல் தடுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே வேளையில் இந்நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து தெருக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொது இடங்களில் நிலவேம்பு கசாயம் நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது இந்நகராட்சி இருப்பில் போதிய அளவில் நில வேம்பு பொடி இல்லாத காரணத்தினால் இந்நகராட்சி எல்லைக்கு அருகேயுள்ள கிராம புறங்களில் பரவுகின்ற வைரஸ் காய்ச்சலானது இந்நகர் பகுதிகளில் பராவமல் தடுக்கவும், பள்ளி மற்றும் வீடுகளுக்கு நலவேம்பு குடிநீர் (கசாயம்) வழங்கும் பணி தடைபடாமல் செயல்படவும் உரிய நடவடிக்கைக்காக தற்போது 500 Kg நிலவேம்பு பொடி கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.9,00,00/-க்கு (1 kg x ரூ.1800) ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புாள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.14/2020/எச்1)

**தீர்மான எண். 1298 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 08:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் இரண்டு நுண்யியர் கூடத்தில் (MCC) உரம் தயாரிக்கும் இடங்களில் ஈக்களின் பாதிப்பு அதிகமாக உள்ளதால் சுகாதாரமாக பரமரிக்க 150 Litre அளவில் லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய சுகாதார ஆய்வாளர் அறிக்கையின்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. 150 litre அளவில் லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.5,00,000/-க்கும், ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவதற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்பாள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.135/2020/எச்1)

**தீர்மான எண். 1299 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கரன்ல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் மற்றும் காமராஜர் பேருந்து முனையத்தில் 5 இடங்களில் எடை இயந்திரம் அமைத்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை விடுவதற்கு 14-01-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (ஆண்டு ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | P.ராமராஜ்,<br>த/பெ.பெரியகருப்பன்,<br>வெள்ளைமலைப்பட்டி,<br>உசிலம்பட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு<br>**ரூ:2,500/-** |

| | | | |
|---|---|---|---|
| 2 | B.பழனிக்குமார், த/பெ.பாலசுப்பிரமணி, 99/56, NSR பேக்கரி தெரு, கரகாட்டான்பட்டி ரோடு, உசிலம்பட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:3,000/-** |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வ.எண்:2-ல் திரு.B.பழனிக்குமார் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ:3,000/- கோரியுள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2545/2019/அ3)

**<u>தீர்மான எண். 1300 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் புதிதாக கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் செயல்பாட்டில் உள்ளதை தொடர்ந்து, காமராஜர் பேருந்து முனையத்தில் உள்ள இலவச சிறுநீர் கழிப்பறை பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையிலும் மற்றும் சுகாதாரம் இல்லாமலும் உள்ளது. தற்போது அனைத்து பேருந்துகளும் காமராஜர் பேருந்து முனையம் வந்து செல்லும் நிலையில் மேற்கண்ட சிறுநீர் கழிப்பறை பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் தவறான செயல்கள் நடைபெற வாய்ப்பு உள்ளது.

எனவே பொது மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாப்பாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திடவும், மேலும் நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் மேற்கண்ட இலவச சிறுநீர் கழிப்பறையினை குத்தகை விடும் பொருட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் கீழ்கண்டவாறு ஏலப் பொறுப்புத் தொகை நிர்ணயம் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத் தொகை (ரூ) | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கூடுதல் பொறுப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | காமராஜர் பேருந்து முனையத்தில் உள்ள சிறுநீர் கழிப்பறை | ரூ: 1,50,000/- | ரூ: 1,00,000/- |

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஏலம் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1414/2019/அ3)

**<u>தீர்மான எண். 1301 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 11</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி ஒன்டிவீரன் நகர் பகுதி சர்வே எண்: 721-ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றிட கோரி திரு.V.சின்னசுருளி என்பவர் நகராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோருக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்: WP (MD) No. 306/2020 தொடரந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.V.ஹேம கார்த்திகேயன் வழக்கறிஞர் ஆஜராகிடவும், மேலும் வழக்கு தொடர்பான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.K.ஹேம கார்த்திகேயன் வழக்கறிஞர் ஆஜராகிட மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட வழக்கு தொடர்பான செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.273/2020/எப்1)

**<u>தீர்மான எண். 1302 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 12</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய பூங்காவினை பராமரிப்பு செய்து தங்களது நிறுவனத்தின் விளம்பரப் பலகை அமைத்திட அனுமதி வழங்கிட தேனி சோல்ஜர் அகாடமி, தேனி நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் உள்ள பூங்காவினை பொது மக்கள் பயன்பெறும் வகையில் முறையாக பராமரிப்பு மேற்கொள்ளவும், மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் விளம்பரப் பலகை அமைத்து விளம்பரம் மேற்கொள்ளவும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

### <u>நிபந்தனைகள்</u>

(1) பூங்கா பகுதியினை சேதம் ஏற்படாத வண்ணம் பராமரிப்பு மேற்கொள்ள வேண்டும்.

(2) பராமரிப்பு பணியினை ஆண்டு தோறும் நகராட்சிக்கு விண்ணப்பித்து புதுப்பித்துகொள்ள வேண்டும்.

(3) பூங்கா சுற்றுப்புறத்தில் விளம்பரம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அனுமதிபெற்று விளம்பரம் மேற்கொள்ள வேண்டும்.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் உள்ள பூங்காவினை பொது மக்கள் பயன்பெறும் வகையில் முறையாக பராமரிப்பு மேற்கொள்ளும் பொருட்டு தேனி சோல்ஜர் அகாடமி, தேனி நிறுவனம் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2813/2019/எப்1)

**<u>தீர்மான எண். 1303 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 13</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2019 - 2020 ம் ஆண்டின் 14வது மத்திய குழு நிதியின் கீழ் ரூ.305.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவிலான 2 தமிழ் தினசரி நாளிதழிலும் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | மக்கள் குரல் ( Newsmen Associates Limited - Bill No MDUMAB192000547, Date : 09.01.2020) | வெ.ஆ.எண்.07 / 2020 / செ.ம.தொ.அ / தேனி, நாள். 08.01.2020 | 22560 |
| 2 | தினபூமி ( Bill No 81576, Date : 09.01.2020 | | 31584 |
| மொத்தம் | | | 54144 |

மேற்கண்ட மொத்த தொகை ரூ.54144/-ஐ சமம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1633/2018/இ1)

**<u>தீர்மான எண். 1304 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 14:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் பிரதான நுழைவுவாயில் தெற்கு பக்க உணவகம் அருகில் உள்ள காலியிடம் (வரிவிதிப்பு எண் : 125/LD02/00041) திரு.காசிராஜா என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.காசிராஜா மற்றும் திரு.M.சக்தி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.காசிராஜா என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.M.சக்தி என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் பிரதான நுழைவுவாயில் தெற்கு பக்க உணவகம் அருகில் உள்ள காலியிடம் (வரிவிதிப்பு எண் : 125/LD02/00041) திரு.காசிராஜா என்பவர் பெயரிலிருந்து திரு.M.சக்தி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.294/2020/அ3)

**தீர்மான எண். 1305 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 15:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கரன்ல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை விடுவதற்கு 29-01-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (ஆண்டு ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | A.வீரபத்திரன்,<br>29, பகதியம்மன் கோயில் தெரு,<br>தேனி. | ஏலக்கேள்வி இல்லை | ஆண்டு குத்தகை<br>**ரூ:1,15,000/-** |
| 2 | V.வசந்த்,<br>14, சொக்கர் தெரு,<br>மதுரை ரோடு,<br>தேனி. | ஏலக்கேள்வி இல்லை | ஆண்டு குத்தகை<br>**ரூ:1,05,000/-** |

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) மேற்கண்ட குத்தகை இனம் 31-12-2019 உடன் உரிம காலம் முடிவுற்று ஏற்கனவே மூன்று முறை ஏலம் கோரப்பட்டு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. A.வீரபத்திரன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ:1,15,000/- கோரியுள்ளார். மேற்கண்ட தொகை சென்ற ஆண்டு குத்தகை உரிம தொகை ரூ:1,11,353/-ஐ விட ரூ:3,647/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ:1,06,135/-ஐ விட ரூ:8,865/- கூடுதலாக இருப்பதால், மேற்கண்ட ஏலக்கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2545/2019/அ3)

<u>தீர்மான எண். 1306 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் 16</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்த முனைய சிறுநீர் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை விடுவதற்கு 29-01-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (ஆண்டு ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | B.பழனிக்குமார்,<br>த/பெ.பாலசுப்பிரமணி,<br>7வது வார்டு,<br>எம்.ஜி.ஆர் நகர், உசிலம்பட்டி. | ஏலக்கேள்வி இல்லை | ஆண்டு குத்தகை<br>**ரூ:45,000/-** |
| 2 | P.ராமராஜ்,<br>த/பெ.பெரியகருப்பன்,<br>வெள்ளைமலைப்பட்டி,<br>உசிலம்பட்டி (தாலுகா)<br>மதுரை (மாவட்டம்) | ஏலக்கேள்வி இல்லை | ஆண்டு குத்தகை<br>**ரூ:50,500/-** |

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) மேற்கண்ட குத்தகை இனத்திற்கு வ.எண்:2-ல் திரு.P.ராமராஜ் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ:50,500/- கோரியுள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2545/2019/அ3)

<u>தீர்மான எண். 1307 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>பொருள் 17</u>:**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **1** முதல் **33** வரை உள்ள வார்டுகளில் சொத்துவரி, காலிமனைவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, பாதாளச்சாக்கடை கட்டணம், தொழில் உரிமக் கட்டணங்கள், வரி மற்றும் வரியில்லா இனங்களுக்குரிய தொகையினை 100% வசூல் செய்து முடிக்க நகரில் ஆட்டோவில் மைக் மூலம் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ1,00,000/—க்கு (ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.807/2019/அ1)

**<u>தீர்மான எண். 1308 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி